ஓய்வூதியச் சுற்றறிக்கை இலக்கம் : 06/2020

எனதுஇலக்கம் :
ஓய்/சுற்றறிக்கை/2020
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை, கொழும்பு 10
2020.06.09

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
மாகாண சபை பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்/ முப்படைத் தளபதிகள்,
பிரதேச செயலாளர்களுக்கு,

**உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக வீட்டிலிருந்து கடமை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளின் கீழ் அரச சேவையை வழங்கல்**

மேற்படி விடயம் தொடர்பாக 2020.04.20 ஆந் திகதி என்னால் வெளியிடப்பட்ட ஓய்வூதியச் சுற்றறிக்கை 05/2020 இலக்கத்துடன் தொடர்புடையது.

02. உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவியுள்ள நிலையில் தபால் நடவடிக்கைகள் செயலிழந்துள்ளதுடன் கடந்த காலப் பகுதியில் ஓய்வூதியம் கோரும் விண்ணப்பங்களை தபால் மூலம் அனுப்புவதற்குரிய வசதி இன்மையால் அவ்விண்ணப்பங்களை இணையத்தளத்தின் ஊடாக (online) அனுப்பி வைப்பதற்குரிய சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

03. தற்சமயம் தொற்று நிலைமை சுமூக நிலைக்குத் திரும்பியுள்ளதுடன் தபால் நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு உள்ளதால் ஓய்வூதிய விண்ணப்பங்களை முன்னரைப் போன்றே தபால் மூலம் அனுப்பி வைக்கக் கூடியதாக உள்ளது. அதனடிப்படையில் 2020.06.10 ஆந் திகதி முதல் மேற்குறிப்பிடப்பட்ட முறையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு ஓய்வூதியச் சுற்றறிக்கை இலக்கம் 03/2016(திருத்தியமைக்கப்பட்ட I) இற்கமைய ஓய்வூதிய விண்ணப்பங்களை தபால் மூலம் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

04. என்னால் வெளியிடப்பட்டுள்ள 05/2020 இலக்க 2020.04.20 ஆந் திகதிய ஓய்வூதியச் சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன்.

**ஒப்பம்:**
**ஏ.ஜகத். டீ. டயஸ்**
ஓய்வூதியத் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள் :

1. சனாதிபதியின் செயலாளர் -தயவுடன்அறிந்து கொள்வதற்காக.
2. பிரதம மந்திரியின் செயலாளர் -தயவுடன் அறிந்து கொள்வதற்காக.
3. செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு -தயவுடன் அறிந்துகொள்வதற்காக.
4. செயலாளர், நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு -தயவுடன் அறிந்து கொள்வதற்காக.
5. கணக்காய்வாளர் தலைமை நாயகம் -தேவையான நடவடிக்கைக்காக